








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 25.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- **குழாய்கள் மூலம் சமையல் எரிவாயு** (கியாஸ்) வினியோகத் திட்டத்தின் 9வது சுற்று ஏலத்தின் கீழ் **129 மாவட்டங்களில்** உள்ள நகரங்களில் குழாய்கள் மூலம் வீட்டு சமையல் அறைகளுக்கே **சமையல் கியாஸ் வினியோகம்** செய்வதற்கான திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
    - தமிழ்நாட்டில் **சேலம், கோவை** நகரங்கள் இத்திட்டத்தினால் **பயன்பெறுகின்றன**. மேலும் 18 மாநிலங்கள் இத்திட்டம் மூலம் பயன்பெற உள்ளன.

- இந்தியாவின் முதலாவது திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகமான **ஸ்ரீ விஸ்வகர்மா திறன் மேம்பாட்டு பல்கலைக் கழகத்திற்கு பிரதமர் அடிக்கல்** நாட்டினார்.
    - **இப்பல்கலைக் கழகமானது ஹரியானாவின் பால்வால்** மாவட்டத்தில் அமைந்துள்ளது.

- **இந்தியா – ஜப்பான்** ஆகிய நாடுகளுக்கிடையே முதலீட்டை அதிகரித்தல், **வர்த்தகங்களை ஊக்குவித்தல் மற்றும் கலாச்சாரங்களைப் பரிமாற்றம் செய்தல்** ஆகிய நோக்கங்களுக்காக, இந்தியா – ஜப்பான் வர்த்தக குழுவின் **2 நாள்** அளவிலான முதல் **"கொன்னிச்சி வா புனே திருவிழா"** மகாராஷ்டிராவின் **புனேவில்** நடத்தப்பட்டது.

# உலக நிகழ்வுகள்

- ஐரோப்பிய யூனியனிலிருந்து **பிரிட்டன் வெளியேறிய பிறகு**, இரு தரப்புக்கும் இடையே தொடர வேண்டிய **உறவு தொடர்பான வரைவு ஒப்பந்தத்திற்கு ஐரோப்பிய ஆணையம் ஒப்புதல்** அளித்துள்ளது.
    - ஐரோப்பியக் கண்டத்தைச் சேர்ந்த 28 நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய யூனியனில், கடந்த **1973ம் ஆண்டு முதல் பிரிட்டன் அங்கம்** வகித்து வருகிறது.
- குறிப்பு:
    - ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான பொது வாக்கெடுப்பு கடந்த 2016ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# விருதுகள்

- உலகளாவிய இணையதள அமைப்பான **ICANN** என்ற அமைப்பால் ஆதரிக்கப்படும் **UASG (Universal Acceptance Steering Group)** என்ற அமைப்பானது **ராஜஸ்தானின் முதல்வர் வசுந்ரா ராஜே-வுக்கு ‘உலகளவில் ஏற்புடைய சிந்தனைத் தலைவர்’** என்ற விருதை வழங்கியுள்ளது.
    - ராஜஸ்தானின் குடிமக்களுக்கு உள்நாட்டு **‘இண்டிக்’** என்ற எழுத்துருவில் **மின்னஞ்சல் முகவரியை** வழங்கிய ‘ராஜ் மெயில்’ என்ற மின்னஞ்சல் சேவையை தொடங்கியதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **சர்வதேச காவல் துறையான இன்டர்போல்** (Interpol) அமைப்பின் புதிய **தலைவராக**, தென்கொரிய நாட்டைச் சேர்ந்த **“சிம் ஜோங் யாங்”** என்பவர் **தேர்வு** செய்யப்பட்டுள்ளார். இவர் துபாய் நகரில் நடைபெற்ற இன்டர்போல் உறுப்பு நாடுகளின் கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- குறிப்பு:
    - சர்வதேச காவல் துறை **(The International Criminal Police Organization - INTERPOL)** சர்வதேச குற்ற நடவடிக்கைகளை தடுப்பதற்காக செப்டம்பர் 7, 1923ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
    - இதன் **தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் லியான் நகரில்** உள்ளது.

- **பிரிட்டிஷ் நடிகை மில்லி பாபி பிரவுன்** (வயது 14) மிக இளம் வயதில் யுனிசெப் (UNICEF) **நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்**. (Youngest – ever UNICEF Good will Ambassador).
    - நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் 2018 உலக குழந்தைகள் தினமான நவம்பர் 20 அன்று இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் (UNICEF) **“இந்தியாவின் முதல் இளைஞர் தூதராக” இந்திய தடகள வீராங்கனை ஹீமா தாஸ் நியமிக்கப்பட்டது** குறிப்பிடத்தக்கது.

We Shine Academy ™

# முக்கிய தினங்கள்

- **நவம்பர் 25 – பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம்**
    - ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் விதமாக, ஆண்டுதோறும் நவம்பர் 25ம் தேதியை பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினமாக கடைபிடிக்கிறது. (International Day For the Elimination of Violence againt woman)
    - 2018ம் ஆண்டின் மையக்கருத்து:- **"உலகளாவிய நடவடிக்கை : ஆரஞ்சு உலகம்" (Global Action : Orange the world)**

We Shine Academy™